செய்தி வெளியீடு எண் : 2245 நாள் : 08.11.2023

**வெங்காய விலை உயர்வினை கட்டுப்படுத்துதல் தொடர்பாக வெங்காய மொத்த வணிகர்கள் சங்க பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம்.**

தற்போது சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் பெரிய வெங்காயத்தின் கிலோ ஒன்றுக்கு மொத்த விலை (Wholesale) ரூ.52/–க்கும், சில்லரை விலை (Retail) ரூ.58/–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசால் பல சீரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு, பெரிய வெங்காயத்தினை அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத் துறையின் மூலம் பொதுமக்கள் பயன் பெறும் பொருட்டு கிலோ ஒன்றுக்கு ரூ.30/– என்ற குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது.

வெங்காய விலை உயர்வினை கட்டுப்படுத்தும் பொருட்டு, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் திரு. ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று 8.11.2023 ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மற்றும் கோயம்பேடு வெங்காய மொத்த வணிகர் சங்கத்தினைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் ஆகியோர்களுடன் வெங்காய விலை ஏற்றத்திற்கான நீண்ட கால தாக்கம் குறித்த காரணங்கள் மற்றும் விலையினை கட்டுப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் மாநிலத்தில் வெங்காய விலையினை ஒரே சீரான நிலையில் வைத்திட அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு வழங்குவதாக வெங்காய மொத்த வணிகர்கள் உறுதி அளித்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in